**<u>செய்தி வெளியீடு எண்.402</u>** **<u>நாள். 30.5.2008</u>**

## <u>அரசு கேபிள் டி.வி கார்ப்பரேஷனுடன் சேர்ந்து பொதுமக்களுக்கு கேபிள் இணைப்பை வழங்கும் பணியை வெற்றிகரமாகச் செய்வதற்கு கேபிள் ஆப்பரேட்டர்கள் உடனடியாக முன்வரவேண்டும்!</u>

## <u>கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு அரசு வேண்டுகோள்!</u>

சென்னை மாநகரத்தில், பொதுமக்கள் தொலைக்காட்சிப் பயன்பாட்டுக்கு கேபிள் இணைப்பை வழங்குவதற்கு ஏற்ப – தமிழக அரசு நிறுவனமான அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுக்கு மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையின் அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதையொட்டி; 2008, ஜுலை 15ந்தேதி முதல் கேபிள் இணைப்பு வழங்கும் பணி தொடங்கப்பட்டு, படிப்படியாக மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு, செப்டம்பர் மாதம் இறுதிக்குள் அப்பணி நிறைவடைவதற்கு ஏற்றவகையில், அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் அனைத்து ஏற்பாடுகளையும் விரைவுபடுத்திச் செய்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் கேபிள் இணைப்பை வழங்குவதற்குத் தக்கபடி– தஞ்சை, கோவை, நெல்லை மற்றும் வேலூரில் தேவையான உபகரணங்களை (Digital Cable Head Ends) வாங்குவதற்கு, வெளிப்படையான ஒளிவுமறைவற்ற டெண்டர் முறையைப் பின்பற்றி கொள்முதல் ஆணை வழங்கப்பட்டு, நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரத்தில் கேபிள் இணைப்பு வழங்குவதற்கு தேவையான உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான டெண்டர் 15.6.2008 அன்று தனியே கோரப்பட உள்ளது.

அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுடன் சேர்ந்து, பொதுமக்களுக்கு கேபிள் இணைப்பை வழங்கும் பணியை மேற்கொள்வதற்கு, மாநிலம் முழுவதும் ஏற்கனவே செயல்பட்டுவரும் கேபிள் ஆப்பரேட்டர்கள், 2008, ஜுன் 9ஆம் தேதிக்குள் தங்களது விருப்பத்தை அறிவிக்கக் கோரி (expression of interest) விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள கேபிள் ஆப்பரேட்டர்கள் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து உறுதி அளித்தபடி – அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுடன் சேர்ந்து, பொதுமக்களுக்கு கேபிள் இணைப்பை வழங்கும் பணியை முழுமையாகவும், வெற்றிகரமாகவும் நிறைவேற்றிடத் தேவையான ஒத்துழைப்பை வழங்கிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.